**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

M.COP.No. 27 /2024 நாள்:20.04.2026

ம.சா:-2 கனகசபாபதி ஆஜர் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை (3 மற்றும் 4 எதிர் மனுதாரர்கள் தரப்பில்):-

இந்த வழக்கில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். இறந்துபோன மாணிக்கமும் நானும் ஒரே ஊர்க்காரர் சொந்தக்காரர் என்றால் ஆமாம். மாமா, மைத்துனர் முறை. விபத்து நடந்தபோது நான் நேரில் பார்க்கவில்லை என்றால் நான் பார்த்தேன். காவல் துறையினர் இந்த விபத்து சம்பந்தமாக விசாரித்தபோது நான் சாட்சியாக இல்லை என்றால் இல்லை. என்னை விசாரித்தார்கள். இந்த விபத்தே மாணிக்கம் சாலையை கடக்க முயன்றபோதுதான் நடந்தது என்றால் ஆமாம், அவர் மெதுவாகத்தான் வந்தார். மாணிக்கம் சாலையை விதி முறையை மீறி தவறுதலாக கடந்ததால்தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நானும், மாணிக்கமும் ஒரே ஊர்க்காரர் மற்றும் சொந்தக்காரர் என்பதால் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் சொல்லிக்கொடுத்து இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த விபத்தை நேரில் பார்த்ததாக கூறுவதும் மருத்துவமனையில் மாணிக்கத்தை சேர்த்தாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் மாணிக்கத்தை தனியார் மருத்துவமனையில் சேர்த்தபோது எனது பெயரை மருத்துவமனையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை:- இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.04.20 15:15:57 +0200<br><br>Subordinate Judge,<br>Kodumudi |